


**18. 06. 2026**

## தலைப்புச் செய்திகள்

**1. தமிழ்நாட்டில் பொது அமைதியை நிலைநாட்டி** பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவதே மாநில அரசின் முதன்மையான லட்சியம் என்று ஆளுநர் திரு. ஆர்.வி. அர்லேக்கர் கூறியுள்ளார்.

**2. தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் வரும்** செவ்வாய்க்கிழமை வரை 3 நாட்கள் நடைபெறும் என்று பேரவைத்தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் தெரிவித்துள்ளார்.

**3. பிரதமர் திரு. நரேந்திர மோடி பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல்** மேக்ரானுடன் இணைந்து உயர் தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் இன்று பாரீசில் பங்கேற்கிறார்.

**4. தமிழ்நாட்டில் மின்வெட்டு பிரச்சனைகள் உடனுக்குடன்** சரிசெய்யப்பட்டு வருவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. சி.டி.ஆர். நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

**5. நியூசிலாந்தில் நடைபெறும் சர்வதேச மகளிர் ஹாக்கி** போட்டியின் அரையிறுதிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

**சட்டப்பேரவை**

**தமிழ்நாட்டில் பொது அமைதியை நிலைநாட்டி** பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை ஒடுக்கி, பாதுகாப்பான சூழலை உருவாக்குவதே மாநில அரசின் முதன்மையான லட்சியமாகும் என்று ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் தெரிவித்துள்ளார்.

17-வது சட்டப் பேரவையின் முதல் கூட்டத்தொடரில் இன்று உரையாற்றிய அவர், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனைகள் வழங்கப்படும் என்றார்.

தமிழ்நாட்டில் போதைப்பொருள் தடுப்பு சிறப்பு படை அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டு போதைப்பொருள் புழக்கம் முற்றிலுமாக ஒழிக்கப்படும்,

கள்ளச்சாரயத்தையும், சட்டவிரோத மது விற்பனையையும், முற்றிலும் ஒழிக்க கடுமையான விதிகள் நடைமுறைப்படுத்தப்படும்,

மதுபான விநியோக முறைக்கேடுகள் தடுக்கப்பட்டு சமூக பொருளாதார சூழல் நல்வழிப் படுத்தப்படும்,

கனிமங்கள் மூலமாக கிடைக்கும் வருவாயை இரட்டிப்பாக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்,

நீர்நிலைகளின் கொள்ளளவை அதிகரிக்க வழிவகை செய்யப்படும்,

வேளாண் விளைபொருட்களுக்கு லாபகரமான விலை கிடைப்பது உள்ளிட்ட விவசாயிகளின் நலன்கள் முன்னுரிமையில் செயல்படுத்தப்டும்,

வெளிப்படையான, தூய்மையான நிர்வாகத்தை மக்களுக்கு வழங்கும் வகையில், முறையற்ற நிதி பரிமாற்றங்களும், இடைத்தரகர்களின் தலையீடுகளும் முற்றிலும் ஒழிக்கப்படும் என்று ஆளுநர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறியஅவர்,

அனைருக்கும் கல்வி இயக்கம் திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு உரிய நிதியை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உச்சநீதிமன்ற கிளை சென்னையில் அமைக்க வலியுறுத்தப்படும்,

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படைனரால் சிறைப்பிடிக்கப்படும் நீண்ட கால பிரச்சனைக்கு தீர்வுகாண மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்றார்.

காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வது,

நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவது,

முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை அதிகரிப்பது,

தென்மாநில நதிகளை இணைப்பது போன்ற நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படும்,

தமிழகம் உலகளாவிய பாரம்பரிய சூழல்சார் சுற்றுலாத்தளமாக தரம் உயர்த்தப்படும்,

தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்கள் தொடங்குவதற்கான நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டு லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் கூறினார்.

ஏழை மக்களை கண்டறிந்து அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சுய தொழிலுக்கான வாய்ப்புகளை அரசு ஏற்படுத்தி தரும்,

தூய்மையான குடிநீர் விநியோகம், நகர்ப்புற கட்டமைப்பு, டிஜிட்டல் நிர்வாகம், நிலையான பொருளாதார வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்,

அரசு துறைகளில் உள்ள காலிப்பணியிடங்கள் தேர்வாணையங்கள் மூலம் நிரப்பப்படும்,

தமிழ்நாட்டின் 69 சதவிகித இடஒதுக்கீட்டை பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

**அரசுக்கு நிதி பற்றாக்குறை இருந்தாலும்,** த.வெ.க.வின் தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என உறுதியளித்தார்.

மறைந்த கொள்கை தலைவர்கள் வழியில் இந்த அரசு செயல்படும் என்று கூறிய அவர், மக்கள் நலன் சார்ந்த விஷயங்கள் குறித்து உறுப்பினர்கள் ஆக்கப்பூர்வமாக விவாதிப்பார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

ஒசூர், கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களை தொடங்க அனுமதி அளிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய உரிய நிதி பகிர்வினை கோர சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதோடு, உச்சநீதிமன்றம் வரை சென்று நிதி பகிர்வினை சட்ட ரீதியாக பெற சட்ட வல்லுநர்கள் அடங்கிய சிறப்பு குழு அமைக்கப்படும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வறுமையில்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதே தமிழக அரசின் முக்கிய குறிக்கோள் என்றார்.

தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிநபர் மீதும் ஒருலட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட கடன் சுமை உள்ளதாக தெரிவித்த ஆளுநர்,

2021-22ம் நிதியாண்டில் வரி வருவாய் மற்றும் திட்ட அமலாக்கத்தில், திட்டமிட்ட ஊழல் காரணமாக சென்ற நிதியாண்டில் வரி வருவாய் 5.45 சதவிகிதமாக குறைந்ததாக குறிப்பிட்டார்.

அரசுக்கு நியாயமாக சேர வேண்டிய வருவாயை, அரசின் கருவூலத்திற்கு கொண்டுவர ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை அரசு தொடங்கியுள்ளதாகவும் கூறினார்.

முன்னதாக தலைமை செயலகத்திற்கு வந்த ஆளுநரை பேரவைத் தலைவர் திரு. J. C. D. பிரபாகர் வரவேற்றார்.

தொடர்ந்து காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் ஏற்றுக்கொண்டார்.

தமிழ்த்தாய் வாழ்த்துக்கு பின்னர் தேசிய கீதத்துடன் பேரவை நிகழ்ச்சிகள் தொடங்கின.

❖❖❖❖❖❖❖❖

**ச.பே. உதயநிதி**

இதனிடையே பேரவைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் தமிழகத்தின் வளர்ச்சிக்கும், குழந்தைகள், பெண்கள், விவசாயிகளின் பாதுகாப்பிற்கும் எவ்வித வலிமையான திட்டங்களும் ஆளுநர் உரையில் இடம்பெறவில்லை என குறை கூறினார்.

**செய்தியாளர்களிடம் பேசிய அஇஅதிமுக** பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி புதிய திட்டங்கள் எதுவும் ஆளுநர் உரையில் இடம்பெறவில்லை என குற்றம் சாட்டினார்.

சட்டம் ஒழுங்கை காக்க எவ்வித நடவடிக்கையும் த.வெ.க அரசு எடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

**கூட்டத்தொடர்**

**தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நாளை தொடங்கி** வரும் செவ்வாய்க்கிழமை வரை 3 நாட்கள் நடைபெறும் என பேரவைத்தலைவர் திரு. ஜே.சி.டி. பிரகாபர் அறிவித்துள்ளார்.

பேரவையில் மறைந்த தலைவர்களுக்கு நாளை இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

வரும் செவ்வாய்க்கிழமை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலுரை வழங்கப்படவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி பிரான்ஸ் அதிபர்** இம்மானுவேல் மேக்ரானுடன் இணைந்து உயர் தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் இன்று பாரீசில் பங்கேற்கிறார்.

இந்தியாவின் புதிய படைப்பாற்றல் திறனுடன் கூடிய தொழில் நுட்பங்களை இதில் எடுத்துரைப்பதோடு, தொழில்

சார்ந்த முன்னேற்றங்கள் குறித்தும் பிரதமர் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

தமது ஐரோப்பிய நாட்டு பயணத்தின் ஒருபகுதியாக பிரான்ஸ் நாட்டில் தொழில் தலைவர்களுடனும் முக்கிய ஆலோசனைகளையும் பிரதமர் மேற்கொள்கிறார்.

இந்திய – பிரான்ஸ் நாடுகளின் பொருளாதார மற்றும் தொழில்துறை சார்ந்த ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த பேச்சுவார்த்தைகள் இதில் இடம்பெறுகின்றன.

பிரதமர் தமது 6 நாள் அரசுமுறை பயணத்தை முடித்துக்கொண்டு இன்று நாடு திரும்புகிறார்.

❖❖❖❖❖❖❖❖

**பிரதமர் - 12 ஆண்டு**

**பிரதமர் திரு. நரேந்திரமோடியின் சீரிய** தலைமையில் கடந்த 12 ஆண்டுகளில், அனைவருக்குமான வளர்ச்சி என்ற கொள்கையுடன் அரசு செயலாற்றி வரும் நிலையில், நக்சல் தீவிரவாதம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வேரோடு பயங்கரவாதம் களையப்பட்டு வளர்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுத்து செல்லப்படுவது குறித்த செய்தித் தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

மத்திய அரசின் ஒருங்கிணைந்த பல்முனை பாதுகாப்பு செயல்பாடு திட்டங்கள் தீவிரவாத நடவடிக்கைகளுக்கான பண விநியோகத்தை முடக்கியது.

வளர்ச்சித்திட்டங்களை முன்னெடுத்ததால் நக்சல் பாதிக்கப்பட்ட பகுதிகள் மாவோயிஸ்ட்டு தீவிரவாத நடவடிக்கைகளிலிருந்து விடுபட்டுள்ளது.

2026-ம் ஆண்டு நக்சல் தீவிரவாதம் இல்லாத நாடாக இந்தியா உருவெடுக்கும் என்ற உள்துறை அமைச்சரின் உறுதிமொழிக்கு ஏற்ப பல்வேறு பகுதிகளில் மாவோயிஸ்ட் தொடர்புகளை தகர்த்தெறியும் வகையில் முனைப்பு இயக்கங்களை மத்திய அரசு செயல்படுத்தியது.

சட்டீஸ்கட் மற்றும் ஜார்கண்ட் பகுதிகளில் மத்திய அரசின் சீரிய வளர்ச்சி திட்ட முயற்சிகளால் நக்சல் தீவிரவாதம் தகர்க்கப்பட்டுள்ளது.

தேசிய புலனாய்வு முகமையின் உறுதியான நடவடிக்கைகளால் பயங்கரவாதத்தை ஊக்குவித்த பல்வேறு தலைவர்கள் கொல்லப்பட்டு அப்பகுதிகளில் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டதை அடுத்து மக்கள் அமைதியுடனும், இறையாண்மையுடனும் வாழ்கின்றனர்.

இதுகுறித்து திருச்சியை சேர்ந்த ஓய்வு பெற்ற துணை ராணுவ படைவீரர் திரு. எஸ். தனபால் எமது செய்தி பிரிவிடம் பேசுகையில்

❖❖❖❖❖❖❖❖

**நிர்மல் குமார்**

**தமிழ்நாட்டில் மின்வெட்டு பிரச்சனைகள் உடனுக்குடன்** சரிசெய்யப்பட்டு வருவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. சி.டி.ஆர். நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நான்கரை லட்சம் மின்மாற்றிகள் மாநிலத்தில் உள்ளதாகவும்,

52 இடங்களில் நேற்றைய தினம் மின்தடை ஏற்பட்டதாகவும் கூறினார்.

37 இடங்களில் ஒருமணி நேரத்திற்குள் மின் விநியோகம் சீரானதாகவும் அவர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

**கக்கன்**

**விடுதலை போராட்ட வீரர் தியாகசீலர்** கக்கனின் 118-வது பிறந்தநாளை ஒட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், கொள்கை ரீதியான தலைமைத்துவம் எளிமையான வாழ்க்கை முறை அர்ப்பணிப்பு மிகு சேவையால் எதிர்கால தலைமுறையினருக்கு முன் உதாரணமாக திகழ்கின்றவர் கக்கன் என்று புகழாரம் சூட்டினார்.

மதுரை, மேலூர் தும்பை பட்டியில் அமைந்துள்ள மணி மண்டபத்தில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு ஆட்சித்தலைவர் திரு. ஆகாஷ் இன்று மலர்த்தூவி மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

**நெல்லை வாய்ஸ்**

**நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டப்பேரவை** தொகுதி இடைத்தேர்தலை ஒட்டி வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதற்கட்ட சரிபார்ப்பு பணிகள் இன்று தொடங்கியதாக ஆட்சித்தலைவர் திரு. ஆனந்த் மோகன் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**ஹாக்கி**

**நியூசிலாந்தில் நடைபெறும் சர்வதேச மகளிர் ஹாக்கி** போட்டியின் அரையிறுதிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா – உருவேயை 3-2 எனும் கோல் கணக்கில் வென்றது.

தொடர்ந்து 3 வெற்றிகளை பெற்று Pool - A பிரிவில் முதலிடத்தை பெற்றதை தொடர்ந்து இந்தியா அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖